சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை– ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து கட்டடத்தை மறுசீரமைப்பதற்கு ₹ 20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந–7(2) துறை

அரசாணை (நிலை) எண்.49

நாள் 30.05.2016
திருவள்ளுவராண்டு 2047
துன்முகி, வைகாசி 17

படிக்கப்பட்டது

1 அரசாணை (நிலை) எண்.35, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 29.02.2016.
2 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநரின் கடித ந.க.எண்.12872/இ2-3/2014, நாள் 18.03.2016.

+++++

ஆணை:–

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து கட்டடத்தை ₹ 20.00 இலட்சம் செலவில் மறுசீரமைப்பதற்கு நிர்வாக ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தின் அனைத்து சுவர்களிலும் விரிசல் ஏற்பட்டு மிகவும் பழுதடைந்து பாதுகாப்பற்ற சூழ்நிலையில் உள்ளதால், இக்கட்டிடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர் செய்து கட்டடத்தை முற்றிலும் மறுசீரமைப்பதற்காக ₹ 20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு கோரி பொதுப் பணித்துறையிடமிருந்து பெறப்பட்ட மதிப்பீடுகளுடன் அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டது என்றும், அரசாணை (நிலை) எண்.35, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 29.02.2016–இல் வெம்பக்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து கட்டடத்தை மறுசீரமைப்பதற்கு ₹ 20.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது என்றும், 2015–2016 நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படாத நிலையில் பணி மேற்கொள்ள இயலாத நிலை உள்ளதால், 2016–2017 நிதியாண்டில்

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்கு சொந்தமான அரசு கட்டடத்தின் பழுது நீக்கம் செய்யும் பணிக்காக ₹ 20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறும், தற்போது வெம்பக்கோட்டை குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்தின் பாதுகாப்பு கருதி வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது என்றும், இப்பணியினை பொதுப்பணித்துறை வாயிலாக மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

3. இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் அவர்களின் கருத்துருவை கவனமான ஆராய்ந்த பின், அரசு பின்வரும் ஆணைகளை வெளியிடுகிறது.

i. விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து கட்டடத்தை மறுசீரமைப்பதற்கு ₹ 20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அனுமதியளிக்கிறது.

ii. மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்குநர் பெற்று, உரிய மாவட்ட திட்ட அலுவலர் /குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலருக்கு வழங்குவதற்கு அனுமதியளிக்கிறது.

iii. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை ₹ 20.00 இலட்சம் செலவில் மறுசீரமைக்கும் பணியினை பொதுப்பணித்துறை வாயிலாக மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

iv. பயன்பாட்டு சான்றினை உரிய நேரத்தில் அரசுக்கு அனுப்புமாறு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேலே பத்தி–3(i)ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:

"2059-பொதுப்பணிகள். 01–அலுவலக கட்டடங்கள். 053–பராமரித்தலும் செப்பனிடுதலும். I–திட்டத்தில் சேராதது. CO–கட்டடங்கள்–தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம். 18–பராமரிப்பு. 02–சிறப்பு பராமரிப்பு". (த.தொ.கு.2059–01–053–CO1826)

5. மேலே பத்தி 3(i)–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ₹ 20,00,000–ஐ மேற்கொள்ள கூடுதல் நிதியொதுக்கம் 2016–2017 ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு /திருத்த மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு/துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3(i)–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 3(i)–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவனத்திற்கான உரிய கருத்துருவை 2016–2017 ஆம்

ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் மற்றும் திருத்திய வரவு செலவு மதிப்பீடு/ திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (சந/வ.செ.பொ–1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.28632/நிதி(சந)/2016, நாள் 23.05.2016 இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.262 (இருநூற்று அறுபத்து இரண்டு).

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர் (முசூபொ)
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்,
சென்னை–113.
மாவட்ட திட்ட அலுவலர்/குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்,
விருதுநகர் மாவட்டம் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர் வழியாக)
மாவட்ட கருவூல அலுவலர், விருதுநகர் மாவட்டம்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், விருதுநகர் மாவட்டம்.
மாநில கணக்காயர், சென்னை 18
மாநில கணக்காயர் (தணிக்கை I/II), சென்னை – 18
இருப்பிட கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமை செயலகம், சென்னை–9
நிதி (சந/வரவு செலவு பொது– I/II) தலைமை செயலகம், சென்னை - 09.
மாண்புமிகு அமைச்சர் (நிதி (ம) பொ.ப) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை - 09.
மாண்புமிகு அமைச்சர் (சந (ம) சதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை - 09.
இருப்பிட கணக்கு அலுவலர், (சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந2) துறையின் வழியாக)
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட(சந2) த்துறை, சென்னை –9
இருப்பு கோப்பு /உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஆர்.எம். சுர்திஷ் 01/06/2016
பிரிவு அலுவலர்.
1/6/16